1973 மார்ச் 28] [பேரவைத் துணைத் தலைவர்]

"நிதிக் கோரிக்கை எண் 46—அரசு வாணிகத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,28,50,400-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

சி. கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும், கடனைத் திருப்பிக் கொடுத்தலும்.

நிதிக் கோரிக்கை எண் 47—மாநில அரசு வழங்கும் கடன்களும், முன்பணங்களும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"நிதிக் கோரிக்கை எண் 47—மாநில அரசு வழங்கும் கடன்களும், முன்பணங்களும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 88,50,700-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

(2) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) தமிழ் நாடு, 1973-ம் ஆண்டு நிதி ஒதுக்க (3-ம் எண்) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு நிதி ஒதுக்க (3-ம் எண்) சட்ட முன்வடிவை இப்பேரவையில் அறிமுகம் செய்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

6. அரசினர் சட்ட முன்வடிவு.

தமிழ்நாடு 1973-ம் ஆண்டு நிதி ஒதுக்க (3-ம் எண்) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பேரவைத் துணைத் தலைவரவர்களே, தமிழ்நாடு 1973-ம் ஆண்டு நிதி ஒதுக்க (3-ம் எண்) சட்ட முன் வடிவை அறிமுகம் செய்ய நான் அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இச் சட்ட முன்வடிவை நான் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது.

(7) **அரசினர் தீர்மானம்**

பொதுத் தொழில் நிறுவனங்கள் குழு அமைப்புக் குறித்து.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, 28—3—1973-ம் நாளுக்கான நிகழ்ச்சி நிரலில் கொடுக்கப்பட்டுள்ள அரசினர் தீர்மானத்திற்குப் பதிலாக கீழ்க்கண்ட திருத்திய அரசினர் தீர்மானத்தை முன்மொழிகின்றேன்.

"பொதுத் தொழில் நிறுவனங்கள் குழு" எனப்படும், இப்பேரவையின் குழு ஒன்று இருபத்தோரு உறுப்பினர்களைக் கொண்டு அமைக்கப்பட இருக்கிறது. அவர்களில், பதினாறு உறுப்பினர்களுக்கு மேற்படாத உறுப்பினர்களை, இப்பேரவை, தனது உறுப்பினர்களிலிருந்து, ஒற்றை மாற்று வாக்கு மூலம் விகிதாச்சாரப் பிரதிநிதித்துவக் கொள்கைக்கிணங்கத் தேர்ந்தெடுக்கவேண்டும். ஐந்து உறுப்பினர்களுக்கு மேற்படாத உறுப்பினர்களை, இக்குழுவில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்காக சட்டமன்ற மேலவை, தனது உறுப்பினர்களிலிருந்து தேர்ந்தெடுக்கவேண்டும்.

ஆனால், முதற்குழுவின் உறுப்பினர்கள், நேர்வுக்கேற்ப சட்டப் பேரவைத் தலைவர் அல்லது சட்டமன்ற மேலவைத் தலைவரால் நியமனம் செய்யப்பட வேண்டும்.

2. இக் குழுவின் உறுப்பினர்கள், ஓராண்டுக் காலத்திற்கு அல்லது புதிய குழு அமைக்கப்படும் வரை பதவி வகிப்பர்.

3. இக் குழுவின் பணிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

(அ) விவர அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பொதுத் தொழில் நிறுவனங்கள், சட்டப்பேரவைத் தலைவரால் அவ்வப்போது குறிப்பிடப்படக் கூடிய அது போன்ற ஏனைய நிறுவனங்கள் ஆகியவற்றின் அறிக்கைகள், கணக்குகள் ஆகியவற்றை ஆய்வு செய்தல்;